# அவுஸ்திரேலிய உயர்ஸ்தானிகராலயமும் சுற்றுலா அபிவிருத்தி கிறிஸ்தவ சமய விவகார அமைச்சும் இணைந்து விடுத்துள்ள கூட்டு பத்திரிகைச் செய்தி

2017 மார்ச் 01:

**இலங்கையின் வர்த்தக அபிவிருத்திக்கான அவுஸ்திரேலியாவின் உதவி**

அவுஸ்திரேலிய உயர்ஸ்தானிகர் மாண்புமிகு பிரயிஸ் ஹட்செசன் மற்றும் சுற்றுலா அபிவிருத்தி, கிறிஸ்தவ சமய விவகார அமைச்சர் கௌரவ ஜோன் அமரதுங்க ஆகியோர் இணைந்து சந்தை வள அபிவிருத்தி வசதிகள் திட்டத்தினை (MDF) 2017 மார்ச் 01 ஆம் திகதி அங்குரார்ப்பணம் செய்து வைத்துள்ளனர். இலங்கையின் சுற்றுலா வளர்ச்சி மற்றும் அதனுடன் இணைந்த துறைகளின் அபிவிருத்திக்கு உதவும் வகையில் இத்திட்டம் அமைந்துள்ளது.

அவுஸ்திரேலிய அரசாங்கம், சந்தை வள அபிவிருத்தி வசதிகள் திட்டத்தின் கீழ் வர்த்தக மானியங்கள் மற்றும் அபிவிருத்திச் சேவைகளுக்கென நான்கு வருட காலத்தில் ஆயிரம் மில்லியன் ரூபாவை உதவியாக வழங்கவிருக்கிறது.

அங்குரார்ப்பண நிகழ்வில் உயர்ஸ்தானிகர் பிரயிஸ் ஹட்செசன் உரைநிகழ்த்துகையில், வளர்ச்சி மற்றும் தொழில் வாய்ப்பு உருவாக்கம் என்பவற்றுக்கு தனியார் துறையே உந்து சக்தியாக உள்ளது என்று கூறினார். 'அவுஸ்திரேலியா தனது போட்டி அடிப்படையிலான சுற்றுலாத் தொழிலின் வளர்ச்சியையிட்டு மிகவும் பெருமை கொண்டுள்ளது. இத்தகைய எமது அறிவையும், அனுபவங்களையும், இலங்கை நண்பர்களுடன் பகிர்ந்து கொள்ளவென நாம் இன்று சந்தை வள அபிவிருத்தி வசதிகள் திட்டத்தினை ஆரம்பிக்கின்றோம்' என்று கூறினார்.

அமைச்சர் ஜோன் அமரதுங்க இங்கு கருத்து வெளியிடுகையில், 'பிரயாணமும் சுற்றுலாவும் உலகில் மிகப்பெரும் சேவை வழங்கும் தொழிற்துறையாகும்' என்று கூறினார். அவுஸ்திரேலியாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான இந்த இணைப்பு அதிக எண்ணிக்கையான புதிய தொழில் வாய்ப்புக்களை உருவாக்குவதற்கும், சுற்றுலாத் தொழிலின் தரத்தினை மேலும் அபிவிருத்தி செய்வதற்கும் அதன் மூலம் இலங்கையில் சிறந்த சுற்றுலா அனுபவங்களை வழங்குவதற்கும் பெரிதும் உதவும்' என்றும் தெரிவித்தார்.

வர்த்தக நடவடிக்கையாளருடன் இணைந்து, சந்தை வள அபிவிருத்தி வசதிகள் திட்டம், இலங்கையின் பல்வேறு சுற்றுலா தலங்களையும், சேவைகளையும் உற்பத்திப் பொருட்களையும் பன்முகப்படுத்த உதவும். சுற்றுலாத் தொழிலின் போட்டி அடிப்படையிலான நிலைமைக்கும், நிலைபேறான தன்மைக்கும் இது முக்கியத்துவம் வாய்ந்ததோடு, பொருளாதார நன்மைகள் மேலும் பரவலான விதத்தில் அதிகரிக்கப்படுவதற்கு வழிவகுக்கும். சந்தை வள அபிவிருத்தி வசதிகள் திட்டமானது டிஜிட்டல் சேவைகள் மற்றும் உள்ளூர் உற்பத்திப் பொருட்கள் அபிவிருத்தியிலும் கவனத்தினை செலுத்தும்.

சந்தை வள அபிவிருத்தி வசதிகள் திட்டம் சம்பந்தமாக உயர்ஸ்தானிகர் திரு.ஹட்செசன் மேலும் கருத்து வெளியிடுகையில், ‘இந்த முயற்சி சமூக முயற்சியாண்மை அடிப்படையில் செயற்படும்’ என்று கூறினார். சுற்றுலா மற்றும் சம்பந்தப்பட்ட துறைகளில், புதியதும் முன்னேற்றகரமான வியாபார முயற்சிகளில் முதலிடுவதன் மூலம், வர்த்தக ரீதியில் நிலைபேறானதும், சமூகத்திற்கு இசைவானதுமான பெறுபேறுகளை அடைய உதவும்’ என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

இலங்கையில் சந்தைவள அபிவிருத்தி திட்டம் சம்பந்தமான மேலதிக விபரங்களை marketdevelopmentfacility.org என்ற இணையத்தளத்தில் பெற்று கொள்ளலாம்.